TNCB190000292022

Presented on : 24-01-2022
Registered on : 19-10-2022
Decided on : 20-04-2026
Duration : 4 years, 2 months, 27 days

**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தீர்ப்பாயம்**

**மேட்டுப்பாளையம்,**

**முன்னிலை : திரு. K. பழனிவேல், B.L,**

**சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ம் நாள் திங்கட்கிழமை

**எம்.சி.ஓ.பி. எண் 129/2022**

**CNR.NO.TNCB19000-029-2022**

திரு. சுந்தரம், (56). த/பெ. கரிவரத கவுடர்,

முகவரி 103 -1, R.K. நகர், டீச்சர்ஸ் காலணி, காரமடை, மேட்டுப்பாளையம் தாலுக்கா.

**.... மனுதாரர்**

**/// எதிர் ///**

1). திரு. மாணிக்கபிரபு (20), த/பெ. ரவிகுமார்,

முகவரி கதவு எண். 2/67, கண்ணார்பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம்.

2). திரு. தங்கமணி, (42), த/பெ. தியாகராஜன்,

முகவரி 6/42, அம்பேத்கார் தெரு, சிறுமுகை சாலை, மேட்டுப்பாளையம்.

3). MAGMA HDI GENERAL INSURANCE COMPANY LIMITED,

முகவரி 2 வது மாடி, ஸ்ரீ காம்ப்ளக்ஸ், 1510, திருச்சி சாலை, கோயமுத்தூர்

..... **எதிர்மனுதாரர்கள்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 20.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. T.சிவகுரு, அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.R. கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவர்களுக்கெதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தைக் கேட்டும், இன்று இந்த தீர்ப்பாயம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

01). இம் மனுவானது, கடந்த 23.06.2020 அன்று சாலை விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக ரூ.20,00,000/- ம் இழப்பீடு வேண்டி மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166 (1 A) ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***02). Facts relating to the claim:***

*1). Claim for - Grievous injury*
*2). Name of the injured person - Sundaram*
*3). Age of the Injured person - 56*
*4). Occupation - Welder*
*5). Income pleaded - 20,000/- Per month*
*6). Date of accident - 23.06.2020*
*7). Compensation claimed - 20,00,000/-*
*8). Insurance Policy Covered - 29.10.2019 to 28.10.2020*
*9). Driving License valid for offending vehicle – Without DL*
*10). Date of petition presented - 24.01.2022*

***11). Date of petition taken on file - 17.11.2022***

***03). மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-***

கடந்த 23.06.2020 அன்று மதியம் 03.30 மணியளவில் மனுதாரர் TN40A2601 என்ற இரு சக்கர வாகனத்தில் காரமடை - அன்னூர் சாலையில் வடக்கிலிருந்து தெற்குபுறம் சென்று மேற்கே திரும்பும் போது, TN 40T4269 என்ற இரு சக்கர வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் வாகனத்தின் மீது மோதியதில் மனுதாரர் கீழே விழுந்ததில் மனுதாரருக்கு எலும்புமுறிவுகளும், கொடுங்காயங்களும் ஏற்பட்டன. விபத்து சமயத்தில் மனுதாரர் Welder வேலை பார்த்து மாதம் ரூ. 20,000/- சம்பாதித்து வந்தார். ஆகவே, மனுதாரருக்கு ரூ. 20,00,000/- ஐ எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக வழங்க உத்தரவிட வேண்டும்.

***04. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம் :***

மனுதாரர் கவனக்குறைவாக வாகனத்தை சாலையின் குறுக்காக திருப்ப முற்பட்டதால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது. மேலும், விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை. மேலும், மனுதாரர் அதிகமான தொகையை இழப்பீடாக கோரியுள்ளார். ஆகவே, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

***05). இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய முக்கிய பிரச்சினைகள் பின்வருமாறு :-***

(அ) இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதா?

(ஆ) மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? இழப்பீடு பெறத்தக்கவரெனில் எந்தெந்தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர்?

(இ) மனுதாரருக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?

06). 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர் எடுக்க வேண்டிய அனைத்து

எதிர்வாதங்களையும் 3ம் எதிர்மனுதாரர் எடுக்க அனுமதி வேண்டப்பட்டதன் பேரில் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170 ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

07). மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ. 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.1 மற்றும் எ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். எ.சா.ஆ. 1 முதல் எ.சா.ஆ. 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**08). எழுவினா (அ) விற்கான விவாதமும் தீர்வும்**
**இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதா?**

மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞர், மனுதாரர் TN40A2601 என்ற இரு சக்கர வாகனத்தில் காரமடை - அன்னூர் சாலையில் வடக்கிலிருந்து தெற்குபுறம் சென்று மேற்கே திரும்பும் போது, TN 40T4269 என்ற இரு சக்கர வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் வாகனத்தின் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டு மனுதாரருக்கு எலும்புமுறிவும், கொடுங்காயங்களும் ஏற்பட்டுள்ளதால் தகுந்த இழப்பீடு வழங்குமாறு மனு தாக்கல் செய்து வாதிட்டார்.

09). 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞர், விபத்து மனுதாரரின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டுள்ளது. மேலும், விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை. மேலும், அதிகமான தொகையை மனுதாரர் இழப்பீடாக கோரியுள்ளார். ஆகவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என பதிலுரை தாக்கல் செய்து வாதிட்டார்.

10). மேற்கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும்

கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் மனுதாரருக்கு எலும்புமுறிவு ஏற்பட்டது என்பதும், மேலும், 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

11). மனுதாரர் தனது சாட்சியத்தில் கடந்த 23.06.2020 அன்று மதியம் 03.30 மணியளவில் மனுதாரர் TN40A2601 என்ற இரு சக்கர வாகனத்தில் காரமடை - அன்னூர் சாலையில் வடக்கிலிருந்து தெற்குபுறம் சென்று மேற்கே திரும்பும் போது, TN 40T4269 என்ற இரு சக்கர வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் வாகனத்தின் மீது மோதியதில் மனுதாரர் கீழே விழுந்து மனுதாரருக்கு எலும்புமுறிவும் கொடுங்காயங்களும் ஏற்பட்டதாக மனுதாரர் தனது சாட்சியத்தை முன் வைத்துள்ளார். மேற்கண்ட மனுதாரரை 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்திருந்த போதிலும், 2ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதை எவ்வகையிலும் விலக்கும் வகையில் இல்லை. அதோடு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதாக 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியம், சான்றாவணங்களை இந்த தீர்ப்பாயத்தில் முன்னிலைப்படுத்தவில்லை மேற்கண்ட பொருண்மைகளை ஒன்றிணைத்து பரிசீலனை செய்கையில் இவ்வழக்கு விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என முடிவு செய்வது தான் நீதியின் பால் சிறந்ததாக இருக்கும் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

12). <u>எழுவினா (ஆ) விற்கான விவாதமும் தீர்வும்</u>

<u>மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? இழப்பீடு பெறத்தக்கவரெனில் எந்தெந்த</u>

**<u>தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர் ?</u>**

இவ்விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதாக இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வந்துள்ளதால் மேற்படி விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு பெற மனுதாரர் உரிமை உள்ளவரென இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது. மனுதாரர் எந்தெந்த தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர் என்பது குறித்து இந்நீதிமன்றத்தின் முடிவு பின்வருமாறு.

**<u>(i) பகுதி நிரந்தர ஊனத்திற்காக</u>** :

13). மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் மூட்டுக்கு கீழ் உள்ள எலும்புகளில் எலும்புமுறிவு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் 04 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளாரென்பது மனுதாரர் தரப்பு ம.சா.ஆ. 4, ம.சா.ஆ 7 மற்றும் ம.சா.ஆ. 10 சான்றாவணமான காயச்சான்றிதழ், விடுவிப்புகுறிப்பு மற்றும் மருத்துவச்செலவு ரசீதுகள் ஆகியவற்றிலிருந்து புலப்படுகிறது. மேலும், மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயத்தின் அளவை நிர்ணயம் செய்ய மருத்துவக்குழு முன்பு முன்னிலையாகி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவக்குழுவால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிக்கையை பரிசீலனை செய்ததில் மனுதாரருக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரருக்கு பகுதி நிரந்தர ஊனம் என்ற வகையில் எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

**<u>(ii) வலி மற்றும் வேதனைக்காக</u>** :

14). 56 வயது நிரம்பிய மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் மூட்டுக்கு கீழ் உள்ள

எலும்புகளில் எலும்புமுறிவு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் 04 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தபோதும் அதன்பிறகு அவருக்கு முழுமையாக நலமாகும் வரையிலும் அவர் தாங்கமுடியாத வலிக்கும் வேதனைக்கும் ஆளாகியிருப்பாரென்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும், எதிர்பாராத விபத்தில் திடீரென பலத்த காயம் ஏற்படும் நிலையில் அவருக்கு ஏற்பட்ட வலியை மற்ற எந்தவொரு நபரும் புரிந்துகெள்ள இயலாது. அந்த வலியைப் பணத்தால் ஈடு செய்யவும் இயலாது. ஆகவே, மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் மூட்டுக்கு கீழ் உள்ள எலும்புகளில் எலும்புமுறிவு ஏற்பட்டதினால் உண்டான வலி மற்றும் வேதனைக்காக ரூ. 65,000/-ஐ இழப்பீடாக வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

## iii ) **கூடுதல்ஊட்டச்சத்து** :

15). 56 வயது நிரம்பிய மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் மூட்டுக்கு கீழ் உள்ள எலும்புகளில் ஏற்பட்ட எலும்புமுறிவு முழுமையாக குணமாகி அதன்பிறகு சாதராண வேலைகளைச் செய்யும் நிலைக்கு ஆளாக குறைந்தபட்சம் 05 மாதங்களாவது ஆகியிருக்கும் என்ற வகையிலும் எப்படி எடுத்துக்கொண்டாலும் குறைந்தபட்சம் மனுதாரரின் ஊட்டச்சத்திற்காக ரூ. 15,000/- செலவாகியிருக்கும். ஆகவே மனுதாரரின் ஊட்டச்சத்து செலவிற்காக ரூ. 15,000/- ஐ இழப்பீடாக வழங்கலாமென இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

## iv ) **உதவியாளர் கட்டணம்** :

16). மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் மூட்டுக்கு கீழ் உள்ள எலும்புகளில் ஏற்பட்ட எலும்புமுறிவு முழுமையாக குணமாக 05 மாதங்களாவது ஆகியிருக்கும்.

மனுதாரர் 04 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற சமயத்தில் அவரது உறவினர்களே அவரை கவனித்துக் கொண்டிருந்திருப்பார்கள் என்ற போதிலும் அவர்கள் தங்களது வேலையை விட்டு முழு நேரப் பணியாகவோ அல்லது பகுதிநேரப்பணியாகவோ இப்பணியைச் செய்திருப்பார்கள். அதன் மூலம் மனுதாரரின் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 12,000/- இழப்பு ஏற்பட்டிருக்கும். ஆகவே மனுதாரருக்கு முற்றிலும் குணமாகும் வரையிலும் அவருக்கு உதவியாளராக இருந்ததற்கான செலவிற்காக ரூ 12,000/- ஐ இழப்பீடாக வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

## V) பயணச் செலவு :

17). விபத்து ஏற்பட்ட சமயத்திலிருந்து முழுமையாக குணமாகும் வரையிலும் மனுதாரர் பலமுறை மருத்துவமனைக்கு சென்று வந்திருப்பார். மேலும், மனுதாரருக்கு ஏற்பட்ட பயணச்செலவாக உரைத்து மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ. 8 (வரிசை) பயணச்செலவு ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ம.சா.ஆ. 8 (வரிசை) பயணச் செலவு ரசீதுகளை பரிசீலனை செய்கையில், மனுவில் கண்ட மனுதாரர் தான் மேற்கண்ட ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றார் என்பது வெளிப்படவில்லை. மேலும், மேற்கண்ட ம.சா.ஆ. 8 (வரிசை) ஆவணங்களை வழங்கிய நபரை கொண்டு நிரூபிக்காகததால் மேற்கண்ட ஆவணங்களை மனுதாரருக்கு சாதகமாக இந்நீதிமன்றம் கருத்திற்கொள்ளளும் வகையில் இல்லை. இருந்தபோதிலும், விபத்து ஏற்பட்ட சமயத்திலிருந்து முழுமையாக குணமாகும் வரையிலும் மருத்துவமனைக்கு பலமுறை மனுதார் சென்று வந்திருப்பார். ஆகவே அவரது பயணச் செலவிற்காக வேண்டி ரூ.10,000/- ஐ இழப்பீடாக வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**vi ) மருத்துவச் செலவு :**

18). மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவுகளாக உரைத்து மருத்துவச் செலவு ரசீதுகள் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ. 7 மற்றும் ம.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ. 7 மருத்துவ ரசீதுகளிலிருந்து மனுதாரருக்கு மொத்தம் ரூ. 1,08,838/- மருத்துவச் செலவானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ ரசீதுகளை தனித்தனியாக பரிசீலனை செய்கையில், மேற்கண்ட மருத்துவ ரசீதுகளில் 7 ரசீதுகள் முன் தொகையாக ரூ. 60,155/- ற்கான செலுத்தியதற்கான ரசீதுகள் ஆகும். இந்நிலையில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 7 ரசீதுகளில் முன் தொகை ரசீதுகளை தவிர்த்து எஞ்சியுள்ள ரசீதுகளிலிருந்து மனுதாரருக்கு ரூ. 48,683/- மருத்துவச் செலவு ஏற்பட்டுள்ளது என்பது புலனாகிறது. மேலும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.10 ல் குறிப்பிட்டுள்ள தொகையை மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் பெற்றுவிட்டதால்தான் அதன் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் Duplicate copy பெற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது. மேலும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்தவாறு ம.சா.ஆ. 10 -ல் குறிப்பிட்டுள்ள தொகையை மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் மூலம் பெற்றுள்ளார் என்பதற்கான எந்தவொரு ஆவணத்தையும் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யாத நிலையில் மேற்கண்ட ஆவணத்தில் கண்டுள்ள தொகையை மனுதாரர் பெற்றுவிட்டார் என்று முடிவிற்கு வர இயலாது. இருந்தபோதிலும், மேற்கண்ட ம.சா.ஆ. 10 அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு உரிய காரணத்தை மனுதாரர் தரப்பில் தெரிவிக்காததால் மேற்கண்ட ஆவணத்தினை இந்நீதிமன்றம்

கருத்திற்கொள்ளவில்லை. ஆகவே மனுதாரருக்கு மருத்துவச் செலவு என்ற வகையில் ரூ. 49,000/- ஐ இழப்பீடாக வழங்கலாமென இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

### vii). <u>வருங்கால மருத்துவச் செலவு :</u>

19). மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ. 08 வது சான்றாவணமான மருத்துவ செலவு ரசீதுகளிலிருந்து மனுதாரருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு உள் உபகரணங்கள் பொருத்தப்பட்டு உள்ளது என்பது புலனாகிறது. மேற்கண்ட உள் உபகரணங்களை அகற்ற குறைந்த பட்சம் ரூ. 25,000/- வது மருத்துவ செலவு ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே, வருங்கால மருத்துவச் செலவு என்ற வகையில் மனுதாரருக்கு ரூ. 25, 000/- ஐ இழப்பீடாக வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தாக இருக்கும்.

### <u>Vii) வருமான இழப்பு</u>

20). மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் மூட்டுக்கு கீழ் உள்ள எலும்புகளில் ஏற்பட்ட எலும்புமுறிவு முழுமையாக குணமாகி அவர் தனது அன்றாட வேலைகளைச் செய்வதற்கு குறைந்தது 05 மாதங்களாவது ஆகியிருக்கும். மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் விபத்து சமயம் மனுதாரர் Welder ஆக வேலை பார்த்து மாதம் ரூ. 20,000/- சம்பாதித்து வந்ததாக வெறுமனே வாதுரைக்கப்பட்டதே தவிர மேற்கண்ட கூற்றை நிரூபிக்க ஏதுவாக மனுதாரர் தரப்பில் உரிய சாட்சியங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. இருந்த போதிலும் 56 வயதான ஒரு ஆண் தனது குறைந்தபட்சம் தினம் ரூ. 600/- வது சம்பாதித்து வந்திருக்க வேண்டும். மாதம் 25 நாட்கள் அவர் வேலைக்கு செல்லும்பட்சத்தில் மாதமொன்றுக்கு சுமார் ரூ. 15,000/- வது சம்பாதித்து வந்திருப்பார். ஆகவே, மனுதாரருக்கு வருமான இழப்பு என்ற வகையில் ரூ. 75,000 /- ஐ ( 5X ரூ. 15,000/-)

இழப்பீடாக வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தாக இருக்கும்.

21). மேற்கண்ட அனைத்து பொருண்மைகளையும் கருத்திற்கொண்டு மனுதாரருக்கு கீழ்க்கண்ட வகையில் இழப்பீடு வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

| | | |
|---|---|---|
| வலி மற்றும் வேதனைக்காக : | ரூ. | 65,000/- |
| கூடுதல் ஊட்டச்சத்து : | ரூ. | 15,000/- |
| உதவியாளர் கட்டணம்: | ரூ. | 12,000/- |
| பயணச் செலவு : | ரூ. | 10,000/- |
| மருத்துவச் செலவு : | ரூ. | 49,000/- |
| வருங்கால மருத்துவச் செலவு | ரூ. | 25,000/- |
| வருமான இழப்பு : | ரூ. | 75,000/- |
| மொத்தம் : | ரூ. | 2,51,000/- |

22). <u>எழுவினா (இ) விற்கான விவாதமும் தீர்வும்</u>
<u>மனுதாரருக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?</u>

2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்படவில்லை என்று 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் முன் வைக்கப்படவில்லை. ஆனால் விபத்து சமயம் 2ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தகுந்த ஓட்டுநர் உரிமம் இன்றி வாகனத்தை ஓட்டியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட 2ம் எதிர்மனுதாரக்கு சொந்தமான வாகனம் 3 ஆம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதென்பதே பொறுத்து 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித மாற்று கருத்தும்

முன் வைக்கப்படவில்லை. இருந்தபோதிலும் விபத்து சமயம் 2ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லையென்பதால் காப்பீட்டு விதிகளை மீறியதன் அடிப்படையில் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்று 3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்குரைஞரால் வாதம் முன் வைக்கப்பட்டது.

23). மேலும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து சமயம் 2 ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என தெரிவித்த மேற்கண்ட சங்கதியை பரிசீலனை செய்கையில் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.4 மோட்டர் வாகன ஆய்வறிக்கையை பரிசீலனை செய்கையில், 2ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயம் தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லையென்பது தெளிவாகிறது.

24). மேலும், இந்த வழக்கில் 2 ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாமல் விபத்து சமயத்தில் வாகனத்தை இயக்கியுள்ளதால் காப்பீட்டு விதிமுறைகளை மீறி நடத்துள்ளதன் அடிப்படையில் மனுதாரருக்கான இழப்பீட்டை 2ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவரென இந்நீதிமன்றம் முடிவிற்கு வந்திருந்தபோதிலும் இழப்பீட்டுத் தொகையை 2ம் எதிர்மனுதாரரிடம் வசூலிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு மனுதாரர் மேலும் இன்னல்களுக்கு ஆளாக நேரிடும் என்பதால் நீதியின் நலன் கருதி மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் National Insurance co., Ltd., - Vs – Laxmi Narain Dhut என்ற முன் தீர்ப்பு நெறியில் காட்டப்பட்ட வழிகாட்டுதலின் படியும் மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 2025-3-L.W.1 என்ற முன்தீர்ப்பு வழக்கின் நெறிமுறையின் படியும் மனுதாரருக்குச் சேரவேண்டிய தொகையை 3ம் எதிர்மனுதாரர் வழங்கிவிட்டு பிறகு 2ம் எதிர்மனுதாரரிடம் இருந்து மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 174

ன் கீழ் வசூலித்துக் கொள்ள வேண்டுமென உத்தரவிடலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

***25). இறுதியாக,***

*01). மனுதாரருக்கு ரூ. 2,51,000/-ஐ இழப்பீடாக வழங்கவும் மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த 24.01.2022 முதல் தொகையை வைப்பீடு செய்யும் தேதிவரை, ஆண்டொன்றிற்கு 7.5% வட்டி வழங்கவும் வழக்குரைஞர் கட்டணம் மற்றும் நீதிமன்ற கட்டணத்திற்கான தொகையை செலவுத் தொகையாக வழங்கவும் 3ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை 1 மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென 3-ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையை பாரத ஸ்டேட் வங்கி **IFSC Code : SBIN0004266**, Virtual Acooount - **MTPSUB-**, ல் செலுத்த ஆணையிடப்படுகிறது.*

*02). தொகை செலுத்தப்பட்ட விபரத்தை தீர்ப்பாயத்தின் cbemtp.sc-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப ஆணையிடப்படுகிறது. மேற்கண்ட தொகையை வைப்பீடு செய்த உடன் மனுவின் பெயரில் மனுதாரரின் வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்ய ஆணையிடப்படுகிறது.*

*03). நீதிமன்ற கட்டணமாக ரூ. 1,882/- ஐ மனுதாரர் செலுத்த வேண்டும் வழக்குரைஞர் கட்டணமாக ரூ. 9,520/- என **TamilNadu Legal Authority Act Circular dated 17.10.2016 and Rule 25 ( 6) of Tamilnadu Motor Vehicles Accident Claims Tribunals Rules 1989** - ன் படி நிர்ணயம் செய்யப்படுகிறது. உத்தரவின் நகலை (இலவச நகல் உள்ளிட்ட) முழு நீதிமன்றக் கட்டணத்தையும் செலுத்திய பிறகு மனுதாரருக்கு*

*அளிக்க ஆணையிடப்படுகிறது.*

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 – ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது. Sd/- K.பழனிவேல்

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம்**
**மற்றும் சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

**1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் பட்டியல் :-**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1). | திரு. சுந்தரம் | ம.சா.1 |

**2). மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : -**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1). | --- | முதல் தகவல் அறிக்கை | ம. சா. ஆ.1 | நகல் |
| 2). | --- | மாதிரி வரைபடம் | ம. சா. ஆ.2 | நகல் |
| 3). | --- | பார்வை மகஜர் | ம.சா. ஆ.3 | நகல் |
| 4). | --- | காயச்சான்றிதழ் | ம.சா. ஆ.4 | நகல் |
| 5). | --- | TN 40T 4269 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | ம. சா. ஆ.5 | நகல் |
| 6). | --- | குற்ற அறிக்கை | ம. சா. ஆ.6 | நகல் |
| 7). | --- | மருத்துவ செலவு ரசீதுகள் | ம. சா. ஆ.7 | அசல் |
| 8). | --- | போக்குவரத்து செலவு ரசீதுகள் | ம. சா. ஆ.8 | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9). | --- | STC 613/2020 வழக்கின் தீர்ப்புரை | ம. சா. ஆ.9 | நகல் |
| 10). | -- | மருத்துவ செலவு ரசீது | ம. சா. ஆ.10 | அசல் |

**3). எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1 | திரு. சீனிவாசன் | எ.சா.1 |
| 2 | திரு. அரவிந்த் செல்வன் | எ.சா.2 |

**4). எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1 | -- | கடிதம் | எ.ம.சா.ஆ.1 | அசல் |
| 2 | -- | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | எ.ம.சா.ஆ. 2 | நகல் |
| 3 | -- | தணிக்கை அறிக்கை | எ.ம.சா.ஆ.3 | நகல் |
| 4 | -- | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | எ.ம.சா.ஆ.4 | நகல் |
| 5 | -- | வாகன சோதனை அறிக்கை | எ.ம.சா.ஆ.5 | அசல் |
| 6 | -- | அபராதம் செலுத்தியதற்கான ரசீது | எ.ம.சா.ஆ.6 | அசல் |
| 7 | -- | காப்பீட்டுச் சான்றிதழ் | எ.ம.சா.ஆ.7 | நகல் |
| 8 | -- | வழக்கறிவிப்பு | எ.ம.சா.ஆ.8 | அசல் |
| 9 | -- | அஞ்சல் ஒப்புகை அட்டை | எ.ம.சா.ஆ.9 | அசல் |
| 10 | -- | திருப்பப்பட்ட அஞ்சல் உறை | எ.ம.சா.ஆ.10 | அசல் |

**Sd/- K.பழனிவேல்**

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம்**

**மற்றும் சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

எம்.சி.ஓ.பி.எண். 129/2022

20.04.2026

**சீரான உத்தரவு**